# THIRUMARAI AASAAN


S. Rajanayagam
Editor
86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.
PH. : 04257 - 230030 Cell : 98427 - 30382, 99655 - 30385


Pleading for the restoration of pure New Testament Christianity
Vol. 31 November - 2018 Issue - 11


ஆசிரியர் உரை

# பரிசுத்த பூமி

மகா பரிசுத்தமுள்ள சர்வவல்ல தேவனால் மனுக்குலத்துக்குக் கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ள வேதாகமத்தின் முதல் வசனம் **ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்** (ஆதி 1:1) என்று தொடங்குகிறது. அண்ணாந்து பார்க்கும் பொழுது வான்வெளியில் கண்ணுக்குத் தெரிகின்ற அனைத்துக் கோள்களும், இன்னும் கண்ணுக்குப் புலப்படாமல் ஆகாயமண்டலத்தில் உலா வருகின்ற எண்ணிலடங்கா கிரகங்களும் இன்னும் நீங்களும், நானும் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பூமியும் ஆதியில் அவரால் தான் படைக்கப்பட்டது. அப்படி படைக்கப்பட்டு ஏராளமாயிருக்கின்ற ஏனைய கோள்களுக்கும், பூமி கோளுக்கும் மிகவும் கவனிக்கத்தக்க ஒரு வேறுபாடு உள்ளது. இவ்வுண்மையை இப்பூமியின் அறிவு ஜீவிகள் கிஞ்சித்தும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

எப்படியெனில், தேவனால் படைக்கப்பட்ட அண்ட சராசரங்களில் பூமிகோள் தான் மனிதன் குடியிருக்கும்படியாக தேவனால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வுண்மைக் குறித்து ஏசாயா தீர்க்கன் கூறுவதைக் கவனியுங்கள். **வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியை வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புகளுக்காகச் செய்து படைத்து, அதை உருவேற்படுத்தின தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: நானே கர்த்தர், வேறொருவர் இல்லை** (ஏசாயா 45:18). மறுபடியும் அழுத்திச் சொல்லுகிறேன், பூமிதான் மனிதன் குடியிருப்பதற்கு லாயக்கானது.

உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற இப் பேருண்மையை மருந்துக்குக்கூடப் புரிந்து கொள்ளாத இந்த மெய்ஞானமில்லாத விஞ்ஞானிகள் மனிதன் பூமிக்கு அப்பாலுள்ள வேற்று கிரகங்களும் வாழ்வதற்கு ஏற்றவைகளா என்று கண்டு பிடிப்பதற்கு வருடக் கணக்கில் காலங்களையும், கோடிக்கணக்கில் பணத்தையும், டன் கணக்கில் தங்கள் உழைப்பையும், பெலத்தையும் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மாடாய் உழைத்து, ஓடாய்த் தேய்ந்தாலும் இம்முயற்சியில் ஒரு போதும் வெற்றி பெறவே முடியாது. **அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன்** [பிரசங்கி1:18] என்னும் தேவ வார்த்தைகளுக்குக் கண்கண்ட சாட்சிகளாய்த் திகழ்கிறார்கள். ஏதோ ஒரு வகையில் வேத வசனங்களை இவர்களும் நிறைவேற்கிறார்கள் என்பது ஒரு வகையில் மகிழ்ச்சியே.

பூமி **உருண்டையானது** என்று வேதம் வெளிப்படுத்தியிருக்கும் ஓர் அறிவியல் உண்மையை பல நூறு ஆண்டுகள் கழித்துப் புரிந்து கொண்ட இந்த ஆகாய மார்க்கத்தார், **மனிதனுக்காகவே பிரத்யேகமாகப் படைக்கப்பட்ட பூமி கோளைத் தவிர, வேறு எந்தக் கோளும் வாழ்வதற்கு அருகதையற்றது** என்னும் உண்மையை எப்போது தான் புரிந்து கொள்வார்களோ? சரி அது அவர்கள் பாடு.

பரலோக தேவனால் மனிதனுக்காகவே நேர்த்தியாய் வடிவமைக்கப்பட்ட இப்பூமி **பரிசுத்தமானது** என்று வேதம் எங்கும் குறிப்பிடுவதில்லை. ஆயினும், இம்மாதத்திற்கான தலைப்பு **பரிசுத்த பூமி** என்றுள்ளதை நீங்கள் பார்க்க முடியும். அப்படியானால், இப்பூமி எப்பொழுது பரிசுத்த பூமியாயிற்று, எப்படிப் பரிசுத்த பூமியாயிற்று என்பதைத் தெரிந்து கொண்டு, இப்பரிசுத்த பூமி நமக்கு எப்படிப்பட்ட பக்திப் பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறது என்று அறிந்து கொள்வோம். அதற்குத் தோதாக இதன் பின்னணிக் காரியங்களுக்குள் நமது வழக்கத்தின் படியாகக் கடந்து வருவோம். சரியா?

பழைய பிரமாணங்களின் பிரதிநிதியாகிய மோசே தாசனை நாம் நன்கறிவோம். மோசே ஒரு வரலாற்று நாயகன். எகிப்து தேசத்தில் ஓர் அடிமையாகப் பிறந்து, பார்வோன் அரண்மனையில் செல்லப்பிள்ளையாய் வளர்ந்து, மீதியான் தேசத்தில் ஆடுகளின் பின்னாள் கால்கடுக்க நடந்து, சீனாய் வனாந்திரத்தில் முரட்டாட்டமும், வணங்காக் கழுத்தும் கொண்ட மக்களின் மத்தியில் அலைந்து, தன்னுடைய கனவுச் கானானில் கால் பதிக்கும் பாக்கியத்தை இழந்து, ஏக்கத்தோடு மரித்துப் பரலோக தேவனால் அடக்கம் செய்யப்பட்ட பக்தன் தான் மோசே.

இம்மாபெரும் பக்தனின் வாழ்க்கை மூன்று பகுதிகளைக் கொண்டது. முதல் 40 ஆண்டுகள், அரண்மனையில் சகல கலைப்பயிற்சி. அடுத்த 40 ஆண்டுகள் மாமன் எத்திரோவின் தேசமான தியானில், ஆடுகளின் பின்னே பொறுமை என்னும் பாடத்தில் தனிப்பயிற்சி. இச்சிறப்புப் பாடத்தில் பட்டம் பெறுவதற்குத் தகுதியாகிவிட்ட நிலையில் ஒரு பயங்கர காட்சி. எஞ்சிய 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் அழற்சி!

ஆம், ஆடுகளை மேய்த்துக் கொண்டு அப்படியே தேவ பர்வதமாகிய ஓரேப் மட்டும் வந்த போது,... **கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட் செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினி ஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப் பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்து போகாமல் இருந்தது. அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்து போகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப் போய் இந்த அற்புதக் காட்சியைப் பார்ப்பேன் என்றான். அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன் இதோ, அடியேன் என்றான். அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச் சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார் [யாத். 3:5].**

இந்த அற்புதக் காட்சியின் மூலம், சர்வ வல்ல தேவனாகிய தான் யார் என்பதை வெளிப்படுத்தி, தன்னுடைய வல்லமை என்ன என்பதைப் புரியவைத்து, தனக்கு முன்பாக அவன் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்பதை ஏற்றுக் கொள்ளும்படி செய்து தன்னுடைய மகத்தான வேலைக்கு மோசேயை அழைத்தார். அந்தருணத்தில் தான், நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். அப்படியானால், மோசே நின்றதால் அந்த இடம் பரிசுத்தம் ஆயிற்றா? இல்லவே இல்லை. இது காரணமாக இருந்திருக்குமானால், கடந்த 40 ஆண்டுகளாக மோசேயின் பாதம்பட்ட மீதியான்தேசம் பரிசுத்த மாயிருந்திருக்குமே! வேதம் அப்படியா சொல்லுகிறது? மறுபடியும் இல்லவே இல்லை. மாறாக, அந்தக் சாட்சியின் நடுவே கர்த்தர் இருந்ததால் அப்பூமி பரிசுத்த பூமியாயிற்று. அவன் அந்தக் காட்சிக்குக் கிட்டே, அதாவது தேவ பிரசன்னம் இருக்கும் இடத்தின் அருகே! மோசே நின்றதால் அவன் நின்ற இடம் பரிசுத்தமாயிற்று அவ்வளவுதான். அது கர்த்தராலே ஆயிற்று. பரிசுத்தம் அல்லது அது சம்பந்தமான பொருள் தரும் வார்த்தைகள் ஐநூறுக்கும் மேலான இடங்களில் வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளது. அந்த எல்லா இடங்களிலும் அது தேவனுக்கும், தேவ குமாரனுக்கும், அவருடைய ஆவியானவருக்கும், தேவ வார்த்தைகளுக்கும், தேவ காரியங்களுக்கும் சம்பந்தமுடையவைகளாகவே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அங்கே எரியும் முட்செடிக் காட்சியின் போது, உன் கால்களில் இருக்கிற பாதரட்சைகளைக் கழற்றிப்போடு, நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார். இதன் மூலம் என்னுடைய பிரசன்னம் இருக்கும் இடம் பரிசுத்தமானது என்று மாத்திரம் தேவன் சொல்லாமல், என் சமூகம் இருக்கும் இடத்தில் பயமும், பக்தியும், கட்டுப்பாடும் கட்டாயம் என்று எச்சரிக்கவும் செய்தார். அத்தோடு நான் எதிர்பார்க்கும் பயபக்தி இல்லாமல் என் காரியத்தில் நீ ஜொலிக்க முடியாது, ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டுமென்றும் தெளிவுபடுத்தியுள்ளார்.

இப்பரிசுத்த பூமி நமக்குத் தரும் பாடங்கள் என்னவென்று இப்பொழுது பார்ப்போம்.

## I. *தேவனுடைய வார்த்தை பரிசுத்த பூமியாயிருக்கிறது*

பரிசுத்த பூமி நமக்குக் கற்றுக் கொடுக்கும் முதல் பாடம், வேத வசனங்கள் தேவபிரசன்னத்தை கொண்டிருக்கிற படியால், அது பரிசுத்த பூமியாயிருக்கிறது! ஆகவே, அவைகளை நாம் பயபக்தியோடு கையாள வேண்டும் என்பது.

நாம் வாழும் இந்த உலகத்தில் எண்ணிலடங்காத புத்தகங்கள் பல்வேறு மனிதர்களால் எழுதப்பட்டு புழக்கத்தில் உள்ளன. அவைகளுள் ஆன்மீக நூல்கள் என்று அழைக்கப்படுபவைகளும் அடங்கும். ஆயினும், அவை எதற்கும் இல்லாத சிறப்பு வேதாகமத்திற்கு உண்டு. **வேதாகமம் தான் பரிசுத்த வேதாகமம்** என்று அழைக்கப்படுகிறது. ஏனெனில், ஏனைய எல்லா நூல்களும் ஏதாவது ஒரு மனிதனால் எழுதப்பட்டுள்ள நிலையில், வேதாகமம் மட்டுமே பரிசுத்த தேவனால் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒன்றாக உள்ளது. அப்போஸ்தலன் பவுலடியார், இதன் வார்த்தைகளைப் **பரிசுத்த வேத எழுத்துக்கள்** என்று கூறி (IIதீமோ 3:15) பரிசுத்தத்தோடு நேரடியாகச் சம்பந்தப் படுத்துகிறார்.

இப்படிப்பட்ட வேத வசனங்கள் சம்பந்தமாக ஒருவனுடைய மனநிலை எப்படி இருக்கவேண்டு மென்பதற்கு ஏசாயாவின் ஒரு வசனமே போதும். ... ஆனாலும், சிறுமைப்பட்டு, ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்திற்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன். இன்னும், எஸ்றா ஆசிரியர் சொல்லும் போது, **...இஸ்ரவேலு டைய தேவனின் வார்த்தைகளுக்கு நடுங்குகிற யாவரும் என்னாடே கூடிக் கொண்டார்கள்...** என்றுள்ளது (எஸ்தர்9:4). அங்கே மோ சேயிடத்தில் எதிர்பார்க்கப்பட்ட அதேவிதமான பயபக்தி அவ ருடைய வார்த்தைகள் சம்பந்தமாக நம்மிடமும் எதிர்பார்க்கப்ப டும் (ஏசாயா 66:2).

அப்படியானால், அருமையானவர்களே, பரிசுத்த பூமி யாகிய தேவ வசனங்கள் சம்பந்தமாக நாம் எப்படிப்பட்ட வர்களாக வாழ்ந்து கொண்டுள்ளோம்? எப்படிப்பட்ட பய பக்தியை நாம் வெளிப்படுத்திக் கொண்டுள்ளோம்? அவருடைய வார்த்தைகளுக்கு நடுங்குகிறவர்களாக உள்ளோமா? தேவன் நம்மை நோக்கிப் பார்க்க வேண்டு மென்று நாம் எதிர்பார்க்கிறோம். அவரோ, நீ என் வார்த்தை களுக்கு நடுங்கினப நோக்கி பார்ப்பேன் என்கிறார். உண்மையாகவே, பரிசுத்த பூமியாகிய வேத எழுத்துக்களுக்கு அவர் சத்தத்திற்கு பயப்படுவேமானால் பவுல் சவுலாக இருந்த போது கேட்ட கேள்வி போல் நாமும் கேட்க வேண்டும். **அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்ய சித்த மாயிருக்கிறீர்... என்றான்** (அப் 9:6). பரிசுத்த பூமியாகிய இந்த வேத எழுத்துக்கள்தான் ஒருவனை இரட்சிப்பிற்கேற்ற ஞானமுள்ளவனாக மாற்றுகின்றது (II தீமோ.3:15). பவுல், கமாலியேலின் பாதம் அமர்ந்து கற்ற கல்வியும், ரோமப் பிரஜைக்கான செல்வாக்கும், யூதர்களிடத்தில் அவனுக்கிருந்த மரியாதையும் அவனை இரட்சிப்பிற்கு வழி நடத்தவில்லை. மாறாக, அனனியா மூலம் சொல்லப்பட்ட **வார்த்தைகள் தான் வழி நடத்தியது. அதற்குக் காரணம்,** அவன் தேவ சத்தத்திற்கு செவிக் கொடுத்த விதம் – பயம், நடுக்கம். இந்த உண்மையை உணர்ந்து, பரிசுத்த பூமியாகிய வேத வசனங்களுக்கு நம் பக்தி வாழ்வில் உரிய மரியாதை தந்து, கிறிஸ்துவின் உபதேசத்தின்படி பாவ நிலையிலிருந்து இரட்சிப்படைந்து, பரலோக பாக்கியத்தை உறுதி செய்வோம்.

## II. *சபைக்கூடும் நேரம் பரிசுத்த பூமியாயிருக்கிறது*

பரிசுத்த பூமி நமக்குக் கற்றுக் கொடுக்கும் இரண்டாம் பாடம், சபை கூடும் நேரம் தேவ பிரசன்னத்தைக் கொண்டிருக்கிறபடியால் அது பரிசுத்த பூமியாயிருக்கிறது. ஆகவே, நாம் ஆவியோடும், உண்மையோடும், பயபக்தியோ டும் தேவனைத் தொழுது கொள்ள வேண்டும் என்பது.

இயேசு கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி இரட்சிக்கப்பட்டவர்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட கட்டளைகளில் ஒன்று **சபை கூடி வருதல்** (எபி. 10:25). பரிசுத்த பூமியாகிய வேத வசனங்களின் உபதேசப்படி சபையாகக் கூடி வருவதில் பல நன்மைகள் உண்டு. அவைகளில் பிதானமானது, தேவ பிரசன்னத்தில் நேரத்தைச் செலவிடுவது. எல்லா இடங்களிலும் தேவன் இருக்கிறார் என்பது ஒரு வகையில் உண்மையாக இருந்தாலும், குறிப்பாக எங்கே இருக்கிறார் என்பதை இயேசு வெளிப்படுத்தியுள்ளார். **ஆம், இயேசு ஆண்டவர் கூறும் போது, ஏனெனில், இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்** என்றார்(மத்.18:20). தேவப் பிரசன்னம் சபை யாகக் கூடி வரும்போது படியால் அது பரிசுத்த பூமியாக மாறுகிறது.

இரண்டு பேர், மூன்று பேர் என்று கூறும் இவ்வசனம் நாங்கள் குடும்பமாக வீட்டிலேயே கூடிக் கொள்கிறோம் என்று சொல்லிக் கொள்கிற சோம்பேறிகளுக்கும், அவிசுவாசிகளுக்கும் அனுமதி கொடுப்பதற்காகச் சொல்ல பட்ட ஒன்றல்ல. அப்படிப்பட்டவர்கள் சபை வருவதின் சிலாக்கியத்தையும், சபை கூடுதல் தரும் ஐக்கியத்தையும் புறந்தள்ளுவதோடு இயேசு போதித்த நோக்கத்தையும் கொச்சைப்படுத்துகிறார்கள்.

எப்படியெனில் இரண்டு பேர், மூன்று பேர் என்று மாத்திரம் இயேசு அங்கே சொல்லாமல், **என் நாமத்திலே** என்று சொல்வதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அங்கே அவருடைய நாமம் என்பது அவருடைய அதிகாரம். நமது கரங்களிலிருக்கும் புதிய ஏற்பாடு இயேசுவின் அதிகாரத்தின் படியான காரியங்களைக் கொண்டுள்ளது. ஆராதனைக் காரியங்கள் அனைத்தும் புதிய ஏற்பாட்டு உபதேசக் கோட்பாடுகளின்படி இருக்கவேண்டும். இக்கருத்தை வலியுறுத்தும் விதமாக எபிரெயர் ஆசிரியர் கூறுவதைப் பாருங்கள். ஆதலால், அசைவில்லாத ராஜ்ஜியத்தைப் பெறுகிறவர்களாகிய நாம் பயத்தோடும், பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம் (எபி 12:28).

இப்படித் தேவனைப் பற்றிய பயமும், தேவ காரியங்களில் பக்தியும் இல்லாமல் வெறுமனே அவருடைய பெயர் மாத்திரம் உச்சரிக்கப்பட்டு, தங்கள் விருப்பத்திற்கேற்ப வேத வசனங்களைத் திரித்து, பிரித்து, புரட்டிப் போதிப் பவர்களை, இன்னும் சபை கூடி வருதலின் மேன்மையை உணராமல் தங்கள் இஷ்டத்துக்கு காரிய மாற்றுபவர்களை நியாயத்தீர்ப்பின் நாளில், **நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை: அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள்** என்று சொல்லுவார் (மத்:7:2223). நியாயத்தீர்ப்பின் நாளுக்குப் பிறகு மனந்திரும்பும்படியான வாய்ப்பு ஒருவனுக்கு இல்லவே இல்லை.

அப்படியானால், அருமையானவர்களே! சபை கூடுவது பற்றியும், பரிசுத்த பூமியாகிய சபை கூடும் நேரம் பற்றியும் நமது பார்வை எப்படியுள்ளது? தேவ சட்டத்தையும், தேவத் திட்டத்தையும் மதித்து நாம் நமது பக்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டுள்ளோமா? அல்லது தேவச் சித்தத்தின்படி வாழாமல் கிறிஸ்துவின் உபதேசக் கோட்பாடுகளை மிதித்துப் போகிற போக்கில் நாம் வாழ்ந்து கொள்வோமா? சொல்லுங்கள். அன்று , பரிசுத்த பூமியில் நின்ற மோசேயிடம் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும், பயபக்தியையும் எதிர்பார்த்து எச்சரித்த தேவன் நம்மை மாத்திரம் கண்டுகொள்ளாமல் எப்படியோ ஆராதித்து விட்டுப் போகட்டும் என்று விட்டு விடுவாரா?

ஆராதனை என்பது ஐந்து பங்குகளை உள்ளடக்கிய ஒன்று . அப்பரிசுத்த பூமியில் பாடல் [கொலோ 33:16], ஜெபம் [அப்: 2:42], வேத வாசிப்பு அல்லது பிரசங்கம், கர்த்தரின் பந்தி [அப்: 20:7], காணிக்கை [ II கொரி :16:2] என்று அனைத்தும் இடம் பெற்றால் நாம் பய பக்தியோடு ஆராதிக்கிறோம்.

### III. *மெய்கிறிஸ்தவனின் சரீரம் பரிசுத்த பூமியாயிருக்கிறது*

பரிசுத்த பூமியைக் கொண்டு நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற இன்னுமொரு பாடம், ஒரு கிறிஸ்தவனின் சரீரம் பரிசுத்த ஆவி வாசம் செய்யும் பரிசுத்த பூமியாயிருக்கிறது. ஆகவே, அதைக் கறைபடாமல் காத்துக் கொள்ள வேண்டுமென்பது.

பொதுவாக, ஆலயம் என்பது ஒன்று தங்கி இருக்கக் கூடிய அல்லது வாசம் செய்யக் கூடிய இடம். I கொரிந்தியர் 3:16-ல், ஒட்டுமொத்த சபையும் தேவனுடைய ஆலயம் என்றும் தேவனுடைய ஆவியானவர் வாசம் செய்யும் இடம் என்றும் சொன்ன பவுலடியார், 6-ம் அதிகாரம் 19-ம் வசனத்திற்கு வரும் போது, **உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும், உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?** என்று கூறுகிறார். அதாவது, ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சரீரமும் தேவ ஆவி வாசம் செய்யும் இடம் என்கிறார். அத்தோடு நிறுத்தாமல், கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால், தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும், உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் என்கிறார் [6:20].

கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசப்படி கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானத்தின் மூலம் கீழ்ப்படிந்த ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய சரீரமும் கிறிஸ்துவின் விலையேற்றப்பட்ட ரத்தத்தால் விலை கொடுத்து வாங்கப் பட்டிருக்கிறது [Iபேதுரு2:19]. விலைக்கு வாங்கப்பட்ட ஒன்றுக்கு தன் விருப்பப்படி செயல்படும் உரிமை அற்றுப் போய் விடுகிறது. யாருக்குச் சொந்தமோ அவர்களுடைய விருப்பமே மேலோங்கி இருக்க வேண்டும். அப்படியனால், பவுலடியார் கொரிந்தியருக்குச் சொல்வது போல, நமது சரீரத்தைக் கொண்டு தேவனை மகிமைப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யாமல் சரீரத்தைக் கறைப்படுத்தக் கூடிய இழிவான காரியங்களை செய்வோமானால், நாம் தேவ தூஷணம் செய்கிறவர்களாக மாறிவிடுவோம்.

அப்போஸ்தலனாகிய பவுல், தெசலோனிக்கேயருக்கு எழுதின முதல் நிருபம் 4-ம் அதிகாரத்தில் தேவனுக்கு எப்படிப் பிரியமாயிருப்பது என்றும், எப்படி பரிசுத்தமாய் இருப்பது என்றும் ஆலோசனை கூறுகிறார். அதில்

**அவனவன் தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்ட கொள்ளும்படி அறிந்திருக்க வேண்டும் என்கிறார்.** [I தெச 4:5]. வெறுமனே ஆண்டு கொள்ளுங்கள் என்ற சொல்லாமல், **எப்படி ஆண்டு கொள்ள வேண்டுமென்று அறிந்திருக்க வேண்டும்** என்கிறார். இந்த அறிவை நாம் உலகக் கல்வியின் மூலம் பெற்றுக் கொள்ள முடியாது. பரிசுத்த ஆவியானவரால் உத்தம குமாரனென்று போற்றப்பட்ட தீமோத்தேயு பரிசுத்த வேத எழுத்துக்களிலிருந்தே இப்படிப்பட்ட ஞானத்தைப் பெற்றுள்ளார் [II தீமோ 3:15].

பரிசுத்த பூமியாகிய சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாய் வைக்க ரோமாபுரியாருக்கு கொடுக்கப்பட்ட ஆலோசனையைப் பாருங்கள். **சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்கவேண்டும்** என்கிறார் [ரோமர். 12:1]அது என்ன ஜீவபலி? பலி என்றால் ஒன்ற மரிக்க வேண்டும். அப்படித்தானே! இங்கே பவுலடியார், சரீர ஆசைகளும், சரீர இச்சைகளும் சாக வேண்டும் என்கிறார். தேவன் விரும்பாத ஒன்றை இச்சரீரத்தைக் கொண்டு ஒரு போதும் செய்யக் கூடாது என்பதே அதன் கருத்து. கலாத்தியருக்கு எழுதும் போது ஆவியானவர் இப்படியாகக் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும், அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் [கலா.4:24] என்று. நம்முடைய சரீரத்தைப் பாவம் தீண்டாமல் ஒரு கட்டுப்பாட்டுக்குள்ளாக வைத்து வாழ்வதற்கு இவைகளெல்லாம் போதும் என எண்ணுகிறேன்.

ஆயினும், கடைசியாக ஒன்றை சொல்லி முடிக்க விரும்புகிறேன். நமது மாண்புமிகு உச்ச நீதி மன்றம் கொடுத்த தீர்ப்பு, திருமண உறவுக்கே உண்டான பாலுறவு நெறிக்கு பாடை கட்டும் விதமாக அமைந்துவிட்டது. ஆம், தனிமனித விருப்பத்திற்குத் தடையேதும் இல்லை என்று தகாத உறவுக்குப் பச்சை கொடி காட்டியுள்ளது. நாட்டுச்சட்டம் இப்படியிருக்க இது குறித்து தேவச்சட்டம் என்ன கூறுகிறது பாருங்கள். **விவாகம் யாருக்குள்ளும் கனமுள்ளதாயும் விபச்சாரக்காரரையும், வேசிக்கள்ளரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்** [எபி. 13:5]. ஆம், நாட்டுச் சட்டத்திற்குத் தப்பினாலும் தேவன் தண்டிப்பார் என்பதை மறந்துவிடக்கூடாது.

அன்பானவர்களே, பரிசுத்த பூமி நமக்குக் கற்றுத் தரும் பாடங்களை நாம் ஏனோதானோ என்று எடுத்துக் கொள்ளாமல், மோசேயிடம் எதிர்பார்க்கப்பட்ட பயபக்தியையும், கட்டுப்பாட்டையும் கருத்தாய் கவனத்தில் கொண்டு நமது பரலோக பயணத்தைத் தொடருவோம்! ஆமென் !! ★

# விசுவாசிகளால் நடக்கும் அடையாளங்களாவன

Bro. J.C. சோட்

கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின்னும், தமது பரலோகப் பிதாவினிடத்திற்க்குத் திரும்பு வதற்கு சற்று முன்னும், இயேசுகிறிஸ்து அவருடைய அப்போஸ்தலர்களைத் தம்மைச் சுற்றிலும் உட்கார வைத்து, பின்பு அவர் அவர்களை நோக்கி : நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன : என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான பாஷைகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள் சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதி யஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். இவ்விதமாய்க் கர்த்தர் அவர் களுடனே பேசின பின்பு பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். அவர்கள் பிறப்பட்டுப் போய், எங்கும் பிரசங்கம் பண்ணி னார்கள். கர்த்தர் அவர்களுடனே கூடக் கிரியை நப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். **ஆமென்**'' (மாற்கு 16:15–20).

இன்று எல்லா கிறிஸ்தவர்களும், அல்லது அவர்களில் சில பேராவது பிசாசுகளைத் துரத்த முடியும் என்றும், நவமான பாஷைகளில் பேசமுடியுமென்றும், பாதிப்புக்குள்ளாகாமல் விஷப்பாம்புகளைப் பிடிக்கக்கூடும் என்றும், சாவுக்கேதுவான விஷத்தைக் குடித்தாலும் மரணமேற்படாது என்றும், வியாதிக்காரர்களை அற்புதமாக சுகப்படுத்த முடியும் என்றும் நம்ப விரும்புகின்றனர். அவர்களுடைய நம்பிக்கையை நிரூபிக்க மாற்கு 16:17, 18 வசனங்களைக் காட்டுவார்கள். ஆனால், கிறிஸ்தவர்கள் இந்தக் காரியங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றிருப்பார்கள் என இந்த வசனப்பகுதி கூறுகிறதா?

விசுவாசமுள்ளவர்களால் நடக்கும் அற்புத அடையாளங்களைப் பற்றி நாம் பேசத் தொடங்கும்போது, பல

காரியங்களை நமது மனதில் வைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம் என நான் நினைக்கிறேன்.

முதலாவதாக, தேற்றரவாளனை அல்லது பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை, அப்போஸ்தலர்களுக்கு மட்டுமே இயேசு வாக்களித்தார் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். [யோவான் 14:26; லூக்கா 24:29; அப்.1:18]. அடுத்து, ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள சீடர்களும் கூட பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அவர்களின் பேரில் கைகளை வைக்கும் அதிகாரமும் வல்லமையும் அப்போஸ்தலர்களுக்குக் கொடுக்கப்பட்டது. [அப்.6; அப்.19]. ஆனால், பொதுவாக கிறிஸ்தவர்கள் அனைவரும் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றவர்கள் என்பதாக புதிய ஏற்பாட்டின் பக்கங்கள் முழுவதையும் தேடினாலும் ஒரு இடத்தில் கூட நீங்கள் காணமுடியாது. அப்படியானால், அற்புத காரியங்களைச் செய்யும் வல்லமை பெற்ற கிறிஸ்தவர்கள் யாரும் இன்று இல்லை என்பதே அதன் பொருள். தங்களுக்கு இந்த வல்லமை இருக்கிறது என்று சொல்லுவோர் பலர் உள்ளன. ஆனால், உண்மையில், அவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையால், ஓர் அற்புதம் கூட செய்து காட்டவில்லை. அவர்களால் செய்யவும் முடியாது. இவர்களெல்லாம், ஏமாற்றப்பட்டிருப்பார்கள். ஏமாந்த இவர்கள் தங்கள் பங்குக்கு மற்றவர்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இரண்டாவதாக, விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன என்ற இயேசுவின் அறிவிப்பு சில கிறிஸ்தவர்களுக்கும் அளிக்கப்பட்டதாக இருந்திருந்தால், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைத் தேர்ந்தெடுக்கப் பட்ட சீடர்கள் சிலர் மட்டுமே பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்கள் அவர்களின் மேல் கைகளை வைக்க வேண்டிய அவசியம் என்ன? அப்படி இருப்பின் ஏற்கனவே அற்புதங்களைச் செய்யக் கூடியவர்களாக அவர்கள் இருந்திருப்பார்களே? எனவே, அப்போஸ்தலர்கள் தங்களுடைய கைகளை அவர்களின் மேல் வைக்கும் வரை அப்படிப்பட்ட வல்லமையை சீடர்கள் பெற்றிருக்கவில்லை என்பது தெளிவாகிறது அல்லவா? உதாரணத்திற்கு, பிலிப்பு சமாரியாவுக்குச் சென்று அவர்களிடம் கிறிஸ்துவைப் போதித்தான். பிலிப்பு செய்த அதிசயங்களை ஜனங்கள்

கேள்விப்பட்டு கண்டு, அவனால் சொல்லப்பட்டவைகளை ஒரு மனப்பட்டுக் கவனித்தார்கள். அநேகரிலிருந்த அசுத்த ஆவிகள் மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அவர்களை விட்டுப் புறப்பட்டது. அநேகந் திமிர்வாதக்காரரும் சப்பாணிகளும் குணமாக்கப்பட்டார்கள். அப். (8:6-7) என்று நமக்கு சொல்லப்படுகிறது. இப்போது, பிலிப்புக்கு இந்த வல்லமை எப்போது வந்தது? அப்போஸ்தலர்கள் பிலிப்புவின் மேலும், இன்னும் ஆறு சீடர்களின் மேலும் கைளை வைத்த போது தான் வந்தது. அதற்கு முன்பு, இச்சீடர்கள் பரிசுத்த ஆவியின் கனிகளைப் பெற்றிருந்தனர். அப். (2:38) அவர்கள் பரிசுத்த ஆவியால் நிரம்பியிருந்தார்கள். அப். (6:3) ஆனாலும் அற்புத அடையாளங்களைச் செய்யும் வல்லமையை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

மூன்றாவதாக, விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன என்ற இயேசுவின் அறிவிப்பு சகல விசுவாசிகளுக்கும் அளிக்கப்பட்டிருந்தால், அந்தக்காலம் தொடங்கி நமது காலம் வரையிலுள் சகல கிறிஸ்தவர்களும் அந்நிய பாஷைகளில் பேசவும், விஷமுள்ள சர்ப்பங்களை எடுக்கவும், சாவுக்கேதுவான விஷத்தைச் சாப்பிட்டு உயிரோடு இருக்கவும், பிசாசுகளைத் துரத்தவும், அற்புதமாகச் சுகமளிக்கவும் கூடிய பலவித அடையாளங்களைச் செய்யும் வல்லமையைப் பெற்றிருக்கவும் வேண்டும்: ஆனால் எல்லா கிறிஸ்தவர்களும் இதைச் செய்ய முடியாது. மேலும், அப்போஸ்தலர்களும் பொதுவாக சகல கிறிஸ்தவர்களுமே இந்த வாக்குத்தத்தைப் பெற்றுக்கொண்டார்கள் என வாதம் செய்வோரும் கூட சகல கிறிஸ்தவர்களும் இக்காரியங்களைச் செய்ய முடியாது என்பதை ஒப்புக் கொள்ளுவார்கள். சந்தேகமின்றி, மேலும் தங்கள் நிலையை நியாயப்படுத்த அவர்கள் இப்படியாகச் சில சாக்குப் போக்குகளைச் சொல்லுவர். அதாவது, அவர்களுடைய விசுவாசம் போதுமானதாக இல்லையென்றும், அற்புதங்களை நாங்களல்ல கர்த்தர் தான் செய்கிறார் என்றும், அடையாளங்களைச் செய்யச் சொல்லி நாங்கள் கர்த்தரைச் சோதிக்க விரும்பவில்லையென்றெல்லாம் பொய்யை அடுக்குவர். ஆனால், இவைகளைப் பற்றி வேதாகமம் எங்கே போதிக்கிறது? இப்படிப்பட்ட அற்புதங்களை எல்லாக் கிறிஸ்தவர்கள் செய்யும்படியாக கர்த்தர் அனுமதித்தால் எல்லாரும் செய்யக்கூடும். ஆனால், அப்போஸ்தலர்களாலும் அவர்கள் யார் மேல் கரங்களை வைத்தார்களோ அவர்களாலுமே செய்ய முடிந்தது. சுகப்படுத்தும் வல்லமை இருந்த, அந்தக் கால

கட்டத்தில் தானே பவுலை ஒரு சர்ப்பம் தீண்டவும் அதைக் கவனித்தவர்கள் நிச்சயமாக அவன் மடிந்து போவான் என நினைத்திருக்கையில் அவன் சாகாமல்,எளிதாக கையை உதறி அந்த சர்ப்பத்தை நெருப்பில் போட்டு விட்டு அவன் வழியில் செல்லுவதாகவும், வசனம் நமக்குச் சொல்லுகிறது. [அப்.28:1,10] இந்த நவீன காலத்திலும் விஷமுள்ள பாம்பை ஒரு சிலர் வேண்டுமென்றே பிடித்து, தங்களுடைய வல்ல மையைக் காட்ட முயன்று, பாம்பு தீண்டி தோல்வியுற்று மடிந்து போன சம்பவத்தை சில இடங்களில் நாம் கேட்க முடிகிறது.

நான்காவதாக, இப்போது மேலே கூறப்பட்ட சகல காரியங்களையும் நினைவில் வைத்துக் கொண்டு, மாற்கு 16ம் அதிகரத்தைப் படித்துப் பார்ப்பீர்களானால், கர்த்தர் அப்போஸ்தலர்களைச் சந்தித்து அவர்களுடைய பணி பற்றியும் அதைத் தொடர்ந்து நடப்பவை பற்றியும் கூறுவதைக் காணலாம். அவர்கள் என அடுத்தடுத்து பயன்படுத்தப் பட்டுள்ள பதமானது அப்போஸ்தலர்களையே ஒவ்வொரு முறையும் குறிக்கின்றது. விசுவாசமுள்ளவர்களால் நடக்கும் அடையாளங்களாவன என்று இயேசு கூறியபோது, அவர் பொதுவாக கிறிஸ்தவர்களைப் பற்றிக் கூறவில்லை, மாறாக, அப்போஸ்தலர்களைப் பற்றியே கூறினார். ஒரு வேளை அது எல்லாக் கிறிஸ்தவர்களையும் குறிப்பதாக இருந்தால், ஏன், பின்னாளில் வந்த கிறிஸ்தவர்கள் எல்லோரும் அற்புதங்கள் செய்யவில்லை? ஏனெனில், அப்போஸ்தலகளுக்கு மட்டுமே இந்த வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டிருந்தது. அப்போஸ்தலர்கள் அந்த எல்லாக்காரியங்களையும் செய்யக் கூடியவர்களாக இருந்தனர். தனிப்பட்டவர்களுக்கு நற்செய்தி போதிக்கப்படுவது பற்றியும், அதற்குக் கீழ்ப்படிபவர்களையும், கீழ்ப்படியாதவர்களையும் பற்றிக் குறிப்பிடுகையில், கிறிஸ்து கூறினார்: **விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று** [மாற்கு 16:16]. அந்த அற்புத அடையாளங்கள் அப்போஸ்தலர்களால் தொடர்ந்து நடை பெறுவதாக பின்னர் கர்த்தர் கூறினாரே தவிர, அவர்களின் போதனைகளின் விளைவாக நற் செய்திக்குக் கீழ்ப் படிந்தவர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை. ஆனால், மீண்டுமாக காரியங்கள் இப்படியாகத்தான் நடந்தன என்று நிச்சயமாகத் தெரியும்படிக்கு, அற்புத அடையாளங்களை யாரால் செய்ய முடிந்தது என்றும் யார், யாரால் செய்ய முடியவில்லை என்றும் கவனியுங்கள். யார் அற்புத

வல்லமையைப் பெற்றனர் என்ற உண்மையை, நீங்கள் மாத்திரமல்ல யார் வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்ள முடியும்.

இன்று பிறமொழிகளைக் கற்றுக் கொள்ளாமல் அவைகளைப் பேசக் கூடிய கிறிஸ்தவர்கள் எவரும் இல்லை. அல்லது பிசாசுகளைத் துரத்தவோ, நோயாளிகளை அற்புதமாக சுகப்படுத்தவோ, அப்போஸ்தலர்களுடைய காலத்திலே அவர்கள் செய்த சகல அற்புதமான காரியங் களையோ செய்யும் எந்தக் கிறிஸ்தவர்களும் இன்னும் இது போன்ற அற்புதங்களை இன்று ஏன் செய்ய முடிவதில்லை? இவைகளைச் செய்யக் கூடிய ஒருவர் கூட இன்று இல்லையே, ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா? ஏனெனில், இன்று பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை கர்த்தர் அவர்களுக்கு அளித்திருக்கவில்லை. ஏனெனில், அவ்வாறு ஒரு போதும் அவர் வாக்களிக்கவில்லை.

தாம் செய்வதாக வாக்களித்த சகல காரியங்களையும் கர்த்தர் செய்துகொண்டு வருகிறார். அவருடைய விருப்பத்தை நாம் அறிந்து கொள்ளும்படியாக அவருடைய வசனத்தைக் கொடுத்து, அதை விசுவாசிக்கவும், அதற்குக் கீழ்ப்படியவும், அதன் விளைவாக நம்மை இரட்சிக்கவும் அவர் வாக்களித் திருக்கிறார். இதற்கு மேல் நமக்கு என்ன தேவை?

முன்பு சில சமயங்களில் நான் குறிப்பிட்டது போல, மீண்டுமாக உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்: அற்புதங்களைச் செய்யும் வல்லமையைத் தாங்கள் அடைந்தி ருப்பதாக உரிமை கொண்டாடுவோர், வேதாகமத்தில் காண முடியாத சபைகளில் அங்கம் வசிக்கின்றனர். மனிதன் உண்டாக்கிய பெயர்களை சபைகளுக்குத் தரித்துக் கொண்டு சத்தியத்திற்கு விரோதமான பல காரியங்களை அவர்கள் போதித்து வருகின்றனர். அப்படியானால் தங்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் இருப்பதாக இவர்கள் கூறுவது எப்படி? நிச்சயமாக, இப்படிப்பட்ட தவறுகளில் ஆவியானவர் அவர்களை வழிநடத்திச் செல்லமட்டார்.

என் நண்பர்களே, ஏமாந்து போகாதீர்கள். வேதாகமத்தைப் படியுங்கள், கற்றுக் கொள்ளுங்கள், விசுவாசித்து அதன் உபதேசங்களுக்குக் கீழ்ப்படியுங்கள். அப்படிச்செய்தால் மட்டுமே நீங்கள் சரியான பாதையில் நடைபோட முடியும், மற்றபடி, முடியவே முடியாது. ★

பெண்கள் பகுதி

# குடும்பம் பற்றி தேவனுடைய திட்டம்

Sis. ரேச்சல் இராஜநாயகம்

முதல் குடும்பம் ஏதேன் என்னும் தோட்டத்தில் அமைக்கப்பட்டது. முதல் கணவனும், மனைவியுமாக ஆதாமும், ஏவாளும் இருந்தனர். ஏவாள் ஆதாமுக்கு ஏற்ற துணையாக உருவாக்கப்பட்டாள். ஏவாள் ஆதாமின் எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமாயிருதாள். இவர்கள் இருவரையும் கணவனும் மனைவியுமாக ஏற்படுத்தினவர் தேவன்.

**கணவனின் பொறுப்புகள்**

ஆதாம் தன் மனைவியாகிய ஏவாளை ஆண்டு கொள்ள வேண்டும். கிறிஸ்து எப்படி சபையை நேசித்தாரே அவ்வளவாய் கணவன் தன் மனைவியில் அன்பு கூர்ந்து நேசிக்க வேண்டும் (எபேசியர் 5:25) தன் மனைவியில் அன்பு கூறுகிறவன் தன்னில் தானே அன்பு கூருகிறான் என்று வசனத்தின் மூலம் (எபே 5:25 ) ஆவியானவர் வெளிப் படுத்துகிறார். கணவன் தன் மனைவியை போசித்துக் காப்பாற்ற வேண்டும். கணவன் தன் தகப்பன் தாயை விட்டுப் பிரிந்து தன் மனைவியோடே இசைந்திருக்க வேண்டும். கணவனும் மனைவியும் ஒரே மாம்சமாகிறார்கள். மனைவி யானவள் பலவீன பாண்டமாயிருப்பதினால் கணவன் அவளுக்கு செலுத்த வேண்டிய கனத்தை செலுத்த வேண்டும் (Iபேதுரு 3:7). எப்படி பழைய ஏற்பாட்டில் யாக்கோபு தன் மனைவியாகிய ராகேலை நேசித்தாரோ (ஆதி 29:15-30) அந்த விதமாய் ஒரு கணவனின் அன்பு மனைவியின் மீது இருக்க வேண்டும். மனைவிக்கு தலையாய் இருப்பவன் கணவன். ஒருவன் தன் சொந்த ஜனங் களையும் விஷேசமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால் அவன் விசுவாசத்தை மறுத்தலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்.

**மனைவியின் பொறுப்புகள்**

மனைவியானவள் எல்லாவற்றிலும் தன் கணவனுக்கு கீழ் படிந்திருக்க வேண்டும் (எபேசியர்5:24). மனைவி தன் புருஷனிடத்தில் பயபக்தியாக இருக்கவேண்டும் (எபேசியர்5:33). சாராள் தன் கணவனாகிய ஆபிரகாமிற்கு

பயந்து கீழ்படிந்திருந்தாள் [ I பேதுரு 3:5,6] நீதிமொழிகளில் பார்க்கும் போது, மனைவியைக் கண்டடைகிறவன். நன்மையானதைக் கண்டடைகிறான். கர்த்தரால் தயையும் பெற்றுக்கொள்கிறான் என்றுள்ளது [நீதி. 18:22]. மனைவியானவள் வீட்டில் தரித்திருக்கிறவளாக இருக்க வேண்டும் [தீத்து.2:5]. மனைவியானவள் தன் கணவனிடத்தில் அன்பு செலுத்தாமலும், பிள்ளைகளை நேசிக்காமலும் தெளிந்த புத்தியில்லாமலும், கற்பில்லாமலும் வீட்டில் தரித்திராமலும், அன்பில்லாதவளும், கீழ்படியாதவளுமாய் இருந்தால், அவள் நிமித்தம் வேத வசனம் தூஷிக்கப்படும். தேவனுக்குப் பயன்படுகிற ஒரு ஸ்திரீயின் அலங்கரிப்பு யாதெனில், சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியைக் கொண்டு தகுதியான வஸ்திரத்தை உடுத்துகிறவளாக ஒரு மனைவி இருக்க வேண்டும். குணசாலியான ஒரு ஸ்திரீயைப் பற்றி நீதி 31ம் அதிகாரத்தில் நாம் வாசிக்கிறோம். தேவனக்குப் பயப்படுகிற ஸ்திரீ ஞானம் விளங்க தன் வாயைத் திறக்க வேண்டும். தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கவேண்டும். அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையை யல்ல நன்மையையே செய்கிறாள். [நீதி 31:12] தேவனுக்குப் பயன்படுகிற ஸ்திரீ தன் பிள்ளைகளாலும், கணவனாலும், புகழப்படுகிறாள். அத்தோடு நின்றுவிடாமல் தன் வீட்டு காரியம் எப்படி நடக்கிறது என்ற தி நோக்கமாயிருக்கிறாள்.

**கிறிஸ்துவப் பெற்றோரின் பொறுப்புகள்**

* பிள்ளையானவள் நடக்க வேண்டிய வழியிலே அவனை நடத்து அவன் முதிர்வயதிலும் அதை விடதிருப்பான் (நீதி22:6).
* கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனைகிலும், அவர்களை வளர்ப்பீர்களாக (எபிசேயர்6:4).
* இன்று நான் உனக்கு கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்க கடவது நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிற போதும், வழியில் நடக்கிற போதும், படுத் திருக்கிற போதும், எழுந்திருக்கிற போதும், அவைகளை குறித்துப் பேசு (உபா 6:7) என்று பெற்றோர்களின் கடமையை இங்கு விவரிக்கப்பட்டுள்ளது.
* பிரம்பைக் கையாளாதவன் தன் மகனைப் பகைக்கிறான். அவன் மேல் அன்பாய் இருக்கிறவனோ அவனை ஏற்கனவே தண்டிக்கிறான் (நீதி 13:24).

* பிள்ளையை தண்டியாமல் விடதே: அவனை பிரம்பினால் அடித்தால் அவன் சாகான். நீ பிரம்பினால் அவனை அடிக்கிறதினால் பாதாளத்திற்கு அவன் ஆத்துமாவை தப்புவிப்பாயே (நீதி 23:13).
* பழைய ஏற்பாட்டில் பார்க்கும் போது ஏலி தகப்பன் ஸ்தானத்தில் இருந்துகொண்ட தன் மக்களைக் கண்டியாமல் விட்டதால் பெரிய தவறு செய்துவிட்டான். ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும் அவன்மேல் அந்நாளிலே வரப் பண்ணுவேன். அதை தொடங்கவும் அதை முடிக்கவும் பேசுகிறேன். அவன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும் அவர்களை அடக்காமற்போன பாவத்திமிர்த்தம் நான் அவன் குடும்பத்திற்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்பு செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன் (Iசாமு3:12,13) என்றுள்ளது.
* தகப்பன்மார்கள் மன்னிக்கம் சுபாவம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். லூக்கா 15:11-24 வசனங்களில் மனந்திரும்பிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளது. தன் நிலை உணர்ந்து வந்த போது தன் சொத்தையெல்லாம் தன் மகன் அழித்துவிட்ட போது மனம் திரும்பியவுடன் அவனை தன் குமாரனாக தன் தந்தை ஏற்றுக்கொண்டான். தந்தைமார்கள் மன்னிக்கும் சுபாவம் கொண்டவர்களாக இருப்பது அவசியம்.
* தேவன் ஆபிராகாமைப்படபற்றி கூறும் போது கர்த்தர் ஆபிரகாமுக்கு சொன்னதை நிறை வேற்றும் படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கு தனக்கு பின்வரும் தன் வீட்டாருக்கும், நீங்கள், நீதியையும், நியாயத்தயும் செய்து கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார். (ஆதி 18:19)
* பிதாக்களின் உங்கள் பிள்ளைகளின் திடனற்றுப் போகாத படி அவர்களுக்கு கோபம் ஊட்டாதீர்கள்( கொலோ 3:21)
* தீமோத்தேயுவின் தாயாகிய ஐனிக்கேயாளைப் போன்று நாம் இருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டில் வைராக்கியமாய் கர்த்தருடைய சபையை ஏற்படுத்தி நிருபங்களை எழுதிய அப்போஸ்தலன் பவுலே, விசுவாசத்தில் நான் பெற்ற குமாரன் என்றும், என்னைப் போல மனதையுடையவன் என்றும் பாராட்டும் அளவிற்கு உயர்ந்த நிலையை தீமோத் தேயு பெற்றிருந்தான் என்றால் அதற்கு காரணம் தேவனுக்கு அடுத்து அவன் தாய் ஐனிக்கேயாள்தான்.

★பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்படியுங்கள். இது நியாயம், உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கு , உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக( எபேசியர்.6:1-3).

★தேவையில் இருக்கும் தன் பெற்றோரை உபசரிக்காத பிள்ளை அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான். (1தீமோ. 5:8)

★வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை(பிர.12;1).

★ஞானமுள்ள மகன் தகப்பனை சந்தோஷப்படுத்தகிறான் மூடத்தனமுள்ளவனோ தாய்க்குச் சஞ்சல மாயிருக்கிறான்(நீதி10:1)

★உன் தாய் வயதுசென்றவளாகும் போது அவளை அசட்டை பண்ணாதே. (நீதி.23:22)

★மூடன் தன் தகப்பன் புத்தியை அலட்சியம் பண்ணுகிறான்( நீதி 15:5)

★இயேசு கிறிஸ்துவைப் போல, ஒரு பிள்ளையானது ஞானத்திலும் வளர்த்தியிலும் தேவ கிருபையிலும் மனுஷர் தயவையிலும் அதிக மதிகமாய் விருத்தியடைய வேண்டும்.

★தீமோத்தேயுவைப் போல, கிறிஸ்தவப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் குழந்தைப் பருவத்திலிருந்தே வேத வசனங்களைப் படித்து கடைப்பிடிக்க வேண்டும்.

பிரியமானவர்களே, இந்த மாதம் கணவன், மனைவி, பெற்றோர்கள், பிள்ளைகள் இவர்கள் பொறுப்புக்கள் பற்றி வேத வசனம் சொல்லும் ஆலோசனைகளை பார்த்தோம். இது தான் தேவன் ஒவ்வொரு குடும்பத்தின் மேலும் வைத்துள்ள திட்டம். இதன்படி செய்தால் தான் தேவ திட்டத்தை நிறைவேற்ற முடியும். தேவ திட்டத்தை நிறை வேற்றினால் தான் தேவன் சொல்லியிருக்கும் ஆசீர் வாதங்களை அனுபவிக்க முடியும். சரீரப்பிரகாரமான ஆசீர் வாதம் மாதந்திரம் அல்ல. ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். வேத வசனங்களின் ஆலேசனைப் படி நடப்போம். ஆமென்! ★

வாலிபர் பகுதி

# மன்னிக்கும் மனது

சகோ. பென்னி மார்ட்டின்

**வா**லிபராகிய உங்கள் யாவருக்கும் வானவராம் இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் யாவரையும் இக்கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பொதுவான அளவில் நாம் பார்க்கும்போது இக்காலத்து இளைய தலைமுறையினரிடம் அவர்கள் இணைய தலை முறையினராக இருக்கிறபடியால் மன்னிக்கும் குணம் குறைவாக இருப்பதை நம்மால் காண முடிகிறது. இன்றைய வாலிபர்கள் பலரிடத்தில் மன்னிப்பு என்பது மருந்துக்குக் கூட இல்லாத ஒரு நிலைதான் நீடிக்கிறது. மனித உறவுகளில் சாதாரணமாக ஒருவர் மற்றவருக்கு விரோதமாக பாவஞ்செய்வதுண்டு. ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் மன்னிப்பின் சிகரமாகிய நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்து குற்றத்தால் பாதிக்கப்பட்ட ஒருவர் தனக்கு விரோதமாக குற்றம் செய்தவனிடத்தில் போய், அவனை மீட்டமைக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டுமென்று அறிவுறுத்துகிறார். இது யூத மத குருக்களின் போதனைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. அவர்கள் யார் குற்றம் செய்தாரோ அவர்கள் சாட்சிகளுக்கு முன்பாக பாதிக்கப்கே வர்களிடத்தில் தங்கள் தவறை சரி செய்யவேண்டுமென்று போதித்தார்கள். சில வேளைகளில் குற்றம் செய்தவர்கள் இவ்விதமாக மூன்று முறை செய்ய வேண்டுமெர போதித்தார்கள். யூதமத குருக்கள் குற்றத்தால் பாதிக்கப் பட்டவருக்காக அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. மாறாக, இங்கே குற்றம் செய்தவர்களை தாழ்மைப்படுத்தி இழிவுப் படுத்துவதே அவர்கள் நோக்கமாயிருந்தது. உண்மையாகவே, கிறிஸ்தவனுடைய மன்னிக்கும் எல்லை தேவனுடைய மன்னிக்கும் எல்லையைப் போலிருக்க வேண்டும். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மன்னிப்பைப் பற்றி ஓர் அருமையான உவமையை (மத்தேயு18:23-35) வசனங்களில் சொல்லியிருக்கிறார். அதிலிருந்து மன்னிக்கும் மனதைப் பற்றி சில காரியங்களை நாம் கற்றுக் கொள்வோம்.

### தேவனுடைய ஆச்சரியமான கிருபை

இயேசு கிறிஸ்து சொன்ன இந்த உவமையில் வரும் ராஜா தேவனாயிருக்கிறார். இங்கே இந்த ராஜா தன் வேலைக்காரர்களை கணக்கொப்புவிக்கும்படி கேட்டுக் கொண்டார். ராஜாவுக்கு முன்பாக பத்தாயிரம் தாலந்துகள் கடன் பட்டவனைக் கொண்டுவந்தார்கள். ஒரு தாலந்து என்பது தங்கத்தில் தோராயமாக நூற்றுமுப்பத்தொன்று பவுண்டுகள் எடையுள்ள காசுகளாக இருந்திருக்கிறது அல்லது வெள்ளியில் நூற்றுப்பதினேழு பவுண்டுகள் எடை யுடைய காசுகளாக இருந்திருக்கின்றது. வேறுவிதமாகச் சொன்னால் இந்தக் கடன் மிகப்பெரிய தொகையாக இருந்திருக்கிறது. எடர்ஜீன் என்ற வேதவல்லுநர் சொல்லும் போது அவருடையவைகளை நிர்வகிக்கும்படியாக நம்மிடம் ஒப்புக் கொடுக்கிற பரலோகப் பிதாவிற்கு நாமெல்லோரும் கடனாளிகளாக இருக்கிறோம். நாம் கொள்ளையடித்தது தவறாகப் பயன்படுத்தியது போன்றவைகளைச் சேர்த்துப் பார்த்தால் சொல்ல முடியாத அளவுக்குக் கடன் பட்டிருக்கிறோம். அவைகளை நம்மால் திருப்பிச் செலுத்தவே முடியாது. அவர் தொடர்ந்து நம்மை விடுவிக்கும்படியாக சுவிசேஷத்தை நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறார்.

### இரக்கமற்ற வேலைக்காரன்

அந்த வேலைக்காரன் ராஜா தனக்கு என்ன செய்தார் என்பதை முழுமையாக உணர்ந்து கொள்ளவில்லை. அது தன்னுடைய உடன் வேலைக்காரன் தனக்குச் செலுத்த வேண்டிய சிறிய தொகையை அவனிடத்தில் பலவந்தமாய்க் கேட்டதிலிருந்து தெரிகிறது. அந்த உடன் வேலைக்காரன் இவன் ராஜாவினிடத்தில் விடுத்த வேண்டுகோளையே விடுத்தான். இருந்தபோதிலும் இவன் உடன் வேலைக் காரனுக்கு பணத்துடன் வருவதற்கு நேரத்தைக்கூட கொடுக்க வில்லை, அவனைக் கடனாளிகளின் காவலில் போட்டு விட்டான். இந்த வேலைக்காரனின் செயல்பாட்டைப் பார்த்து மற்ற சக வேலைக்காரர்கள் அதிர்ச்சி அடைந்து நடந்ததை ராஜாவிடம் அறிவித்திருக்கிறார்கள். இந்த வேலைக்காரன் தன் உடன்வேலைக்காரனைக் கடிந்து கொள்வதற்குப் பதிலாக அவனை மன்னித்திருக்க வேணடும். இப்படி யிருக்கிறபடியால் தேவனால் மன்னிக்கப்படுகிறவர்கள் பிறரை மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும் (மத்தேயு 6:18,14,15).

**மன்னிக்காத மனதுக்கு தேவனுடைய பதில்**

நடந்தவைகளைக் கேட்டபோது ராஜா கடுங்கோபங் கொண்டார். தான் அந்த வேலைக்காரனுக்கு மன்னித்தது போல அவனும் மன்னிக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார். அந்த வேலைக்காரன் அப்படிச் செய்யாததினால் அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்து தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். இவ்வளவு பெரிய கடன் தொகையை அந்த லைக்காரன் அந்த சிறைச்சாலைச் சுவர்களுக்குள்ளிருந்து எப்படி திருப்பிச் செலுத்த முடியும் என்பதை கற்பனை செய்துபாருங்கள்! அதுபாடுகள் நிறைந்த நித்திய தண்டனையாகத்தான் இருக்கும். **அப்படியே இயேசு நீங்களும் அவனவன் தன்தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மன்பூர்வமாய் மன்னியாமற்போனால் என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்** என்றார் (மத்தேயு18:35). ஏனென்றால், நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய பார்வையில் பாவம் செய்திருக்கிறோம். நம் பாவங்கள் நித்திய மரணத்திற்குப் பாத்திரமானவைகள். ஆயினும், நம் பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்கும்படியாக தேவன் சொல்ல முடியாத ஈவாகிய அவருடைய குமாரனை நமக்காக அந்த கல்வாரி சிலுவையில் ஒப்புக் கொடுத்தார் ( I கொரி 9:15; யோவான் 3:16,17).

பிரியமானவர்களே! நாம் இதுகாறும் பார்த்த உவமையிலிருந்து இத்தகைய மாபெரும் கடனிலிருந்து நம்மை தேவன் விடுவித்ததற்கு நன்றி செலுத்தும் விதமாக நாம் நமக்கு விரோதமாகப் பாவம் செய்கிறவர்களை மன்னிக்க வேண்டுமென்று கற்றுக்கொண்டோம். மன்னிக்கும் குணம் கிறிஸ்தவ மார்க்கத்தின் அங்கமாயிருக்கிறபடியால் நாம் அதை சொந்தமாக்கிக் கொண்டு பிறரை மன்னித்து தேவனுடைய மன்னிப்பை நாம் பெற்றுக் கொள்வோம். தேவன் தாமே அதற்கு உதவிச் செய்வாராக! ஆமென். ★

---

**இது தான் உண்மையான கிறிஸ்துவின் சபை**

தனித்தனி உள்ளூர் சபைகள் [அப்போஸ்தலர் 14:23]
மூப்பர்களால் ஆளுகை செய்யப்படுகிறது [தீத்து1:59]
உதவிக்காரர்களால் ஊழியம் செய்யப்படுகிறது [ I தீமோத்தேயு 3:13]
போதகர்களால் போதிக்கப்படுகிறது [எபிரெயர் 5:16,14]
பிரசங்கியார்களால் பிரசங்கிக்கப்படுகிறது [ரோமர் 10:13,15]
அங்கத்தினர்களால் பணி செய்யப்படுகிறது [ரோமர் 12:48]

சிறுவர் பகுதி

# தேவையானது ஒன்றே

சகோ. ஏபில் நாயகம்

எனதருமை சிறு தம்பி, தங்கைகளே! இயேசுவின் இனிய நாமத்தில் உங்கள் யாவருக்கும் வாழ்த்துக்கள். அனைவரும் சுகமாக இருக்கிறீர்கள் என நம்புகிறேன். மீண்டும் இந்த இதழின் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். இந்த மாதத்திற்கான பாடம் என்னவென்று பார்க்கலாமா?

லூக் 10:38-42ல், பெத்தானியா ஊரில் நடந்து ஒரு சம்பவத்தை வாசிக்கிறோம். இயேசுவும் அவருடைய சீஷர்களும் லாசருவின் வீட்டிற்கு சென்றார்கள். அங்கே லாசருவின் சகோதரிகளான மார்த்தாளும், மரியாளும் இருந்தார்கள். இவர்கள் இருவரிடமிருந்து ஒரு முக்கியமான பாடத்தை கற்றுக் கொள்ளப்போகிறோம். சரியா?

இயேசு அவர்கள் வீட்டிற்கு வந்த பொழுது மார்த்தாள் வீட்டு வேலைகளில் கவனம் சொலுத்திக் கொண்டிருந்தாள். மரியாளோ இயேசுவின் பாதத்தின் அருகில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். மரியாள் அப்படி செய்வதைப் பார்த்த மார்த்தாள், வலைப்பட்டு, இயேசுவினிடத்தில் மரியாளும் தன்னோடு சேர்ந்து வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டாள். அப்பொழுது இயேசு மரித்தாளிடம் மரியாள் நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் என்று சொன்னார்.

பிள்ளைகளே! இந்த சம்பவம் நமக்கு எப்படிப் பொருந்தும்? நாமும் சில வேலைகளில் மார்த்தாளைப் போல நம் சொந்த வேலைகளில் அதிக ஈடுபாடு கொண்டு தேவனுடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் விட்டு விடுகிறோம். நம் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்பது அதன் அர்த்தமல்ல. முன்னுரிமை என்று வரும் போது, நாம் எதற்கு முன்னுரிமை கொடுக்கிறோம் என்பது முக்கியம். மரியாளைப் போல் தேவனுடைய காரியத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். மார்த்தளைப் போல நம் சொந்த வேலைகளுக்கு முன்னுரிமை கொடுக்கக்கூடாது.

தேவனுடைய காரியங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது என்றால் என்ன? ஞாயிறுகளில் தவறாமல் ஆராதனைக்குச் செல்லுவது, ஞாயிறு பள்ளிக்கு தவறாமல் செல்லுவது, தினமும் குடும்ப ஜெபம் செய்வது என்று தேவனுக்கான நேரத்தை அவருக்குக் கொடுத்து விட்டு பிறகு நம் சொந்த வேலைகளில் நம்மை ஈடுபடுத்திக் கொள்வது ஆகும்.

எனவே, தேவனுடைய நேரத்தை அவருக்கு கொடுத்து. அவருடைய காரியங்களுக்கு நாம் முன்னுரிமை கொடுத்தால். நாமும் தேவனுடைய பார்வையிலே நல்ல பங்கை தெரிந்து கொண்டவர்களாக இருப்போம். அப்படி இருப்பீர்களா?.

# வேத வினா போட்டி

பதிலளிப்போர் கவனத்திற்கு,

**கீழ்க்கண்ட கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் அடுத்த மாதம் 10 ம் தேதிக்குள் திருமறை ஆசான் முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் அலைபேசி எண்ணையும் தவறாமல் எழுதி அனுப்பவும். (இதற்கான விடை டிசம்பர் மாத இதழில்)**

## நியாயாதிபதிகள் புத்தகத்தில் தேடி கண்டுபிடியுங்கள் (1:1-3:31)

1] யோசுவாவின் மரணத்திற்குப் பிறகு இஸ்ரவேலர்களின் முதல் வேலை என்னவாயிருந்தது?

2] அந்த மாபெரும் வேலைக்கு யார் பணிக்கப்பட்டார்?

3] இஸ்ரவேலர் கானானியரை துரத்திவிடாமலிருந்ததன் விளைவு என்னவாயிருந்தது?

4] இஸ்ரவேலின் அடுத்த சந்ததி எவ்விதமான பொல்லாப்பான காரியங்களைச் செய்தார்கள்?

5] அப்பொல்லாப்புகளுக்காக தேவன் அவர்களை எவ்விதமாக தண்டித்தார்?

6] ஏன்தேவன் ஜனங்களுக்காக நியாயாதிபதிகளை எழுப்பினார்?

7] இஸ்ரவேலர்கள் தங்கள் விவாகங்களில் என்ன பாவங்களைச் செய்தார்கள்?

8] கர்த்தர் இஸ்ரவேலரை மெசொப்பொத்தாமியாவின் ராஜாவிடமிருந்து காப்பாற்ற யாரை எழுப்பினார்?

9] தேசம் எத்தனை வருடங்கள் அமைதலாயிருந்தது?

10] சம்காரின் தகப்பன் பெயர் யார்?

## செப்டம்பர் மாத வினாக்களுக்கான விடைகள்

1. யோசுவா:23:5,6
2. யோசுவா:23:7,11
3. யோசுவா:24:3,4
4. யோசுவா:24:9
5. யோசுவா:24:22
6. யோசுவா:24:24
7. யோசுவா:24:24,25
8. யோசுவா:24:27
9. யோசுவா:24:29
10. யோசுவா:24:32

## சரியான பதில் எழுதியவர்களில் சிலர்

| | | |
|---|---|---|
| 1. P. நித்தீஷ் | - | திருப்பத்தூர் |
| 2. இந்திரா ஜெபக்கனி | - | தூத்துக்குடி |
| 3. சாந்தகுமாரி | - | நாசரேத் |
| 4. ரெபேக்காள் ஜேசுராஜ் | - | திருச்சி |
| 5. ஜான்சி | - | கோவை |
| 6. பிலோமீனா | - | கோவை |
| 7. சத்தியசீலன் | - | கோவில்பட்டி |
| 8. மாணிக்கவாசகம் | - | திருச்சி |
| 9. ரூபவல்யா | - | தூத்துக்குடி |
| 10. அருள்ராஜ் | - | சென்னை |
| 11. செல்வம் | - | கோவை |
| 12. ஹரீஸ் சுவேதா | - | பவானி |
| 13. ரேவதி இளையராஜா | - | சென்னிமலை |
| 14. மாலதிஜெயக்குமார் | - | மூலனூர் |
| 15. மேரிகிரேஸ் | - | சென்னிமலை |
| 16. ஜெயராஜ் | - | கோவை |
| 17. மாணிக்கவாசகம் | - | திருச்சி |
| 18. ஆதீஷ் | - | திருச்சி |
| 19. P. நித்தீஷ் | - | திருப்பத்தூர் |
| 20. சாவித்திரி | - | திருப்பத்தூர் |
| 21. பாக்கிய சம்பூர்ணம் | - | ஈரோடு |
| 22. ஜெமினா | - | நெல்லை |
| 23. சுபாஷினி | - | ஈரோடு |
| 24. ஜெயமணி ஜெயபாண்டியன் | - | கடலூர் |
| 25. ஆகாஷ் | - | திருப்பத்தூர் |
| 26. பிரிஷ்யா | - | திருப்பத்தூர் |
| 27. ப்ளோரா சம்மா | - | திருப்பத்தூர் |
| 28. செல்வமணி குணசேகரன் | - | சென்னை |
| 29. ஜெனிஷா | - | தூத்துக்குடி |
| 30. மரகதமணி | - | கோவில்பட்டி |
| 31. மேரி ஜெபராஜ் | - | சென்னை |

# கிறிஸ்தவனும், தனிமையும்

Bro. பாண்டியன்

**ஆ**தியில் மனிதனை சிருஷ்டித்த தேவன் அவன் தனிமையாய் இருப்பது நல்லது அல்ல, அவனுக்கு ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்றார். அதேபோல் மாம்சரீதியாகப் பிரசங்கி சொல்லும் போதும், ஒண்டியாய் இருப்பதிலும். இருவர் கூடியிருப்பது நலம், சேர்ந்து பிரயாசப்பட்டால் பலன் உண்டுடாகும் என்கிறான். ஆனால், நம் வாழ்வில் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் ஒவ்வொருவரும் தனிமையை சந்திக்கிறோம். அதிலும் கிறிஸ்தவனுக்கு இது பழக்கப்பட்ட ஒன்றாக அமைந்து விடுகிறது. உலகம் ஒரு பாதையில் மும்முரமாக ஓடிக் கொண்டிருக்கையில் தேவன் நம்மை அதிலிருந்து பிரித்தெடுத்து இயேசுவின் பாதையில் செல்ல பணித்திருந்தால் நாம் அநேக வேளைகளில் தனித்து விடப்படுகிறோம். இரட்சிக்கப்படாதவர்களுக்கு தனிமை ஒரு சாபம்; நாம் ஏன் தான் பிறந்திருக்கிறோமோ? என்று வாழ்வின் அர்த்தம் புரியாமல் தற்கொலை எண்ணங்கள் கூட உருவாகும் சூழ்நிலை அவிசுவாசிகளுக்கு உண்டாகிறது.

தனிமை பெரும்பாலும் மனிதனை தவறான பாதையில் அழைத்துச் செல்லுகிறது. ஒருவரை கெடுக்கவே பிசாசு, தனிமையை பயன்படுத்துகிறான். உதாரணமாக, ஏவாள் தனித்திருந்த போததான் தேவன் விலக்கிய கனியை பொய் சொன்னதின் மூலம் புசிக்க வைத்தான். அதனால் ஒட்டு மொத்த மனித குலமே பாதிக்கப்பட்டதை நாமறிவோம். தாவீதின் தனிமை அவனை விபச்சாரத்தில் தள்ளியது. ஆனால், பிற்பாடு தன்னைச் சரிசெய்து கொண்டு தேவனுடைய தன் தனிமையை செலவு செய்து தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனானான். நேபுகாத்நேச்சார் தன் தனிமையில் மேட்டிமை சிந்தை அடைந்தவனாய் தற்பெருமைபட்டதால் அவன் ராஜ்ஜியபாரத்திலிருந்து தள்ளப்பட்டு, மாட்டைப் போல் புல்லை மேய்கிறவனான். தேவனுடைய மனுஷர்களுக்கு தனிமை ஒரு ஆசீர்வாதமாகவே அமைகிறது. ஈசாக்கை கவனியுங்கள். அவன் வாலிப வயதில் தன் வயதையொத்த வாலிபர்களோடே இன்றைய மக்களைப் போல் அரட்டை அடிக்காமல் அதுவும் சாயங்கால வேளையில் தேவ சிந்தையுள்ளவனாய்,

தியானம் பண்ண வெளியிலே போனான் (ஆதி 24:63). அருமையான தேவ பிள்ளையே! வாலிபப் பிரயாத்தில் உன் சிருஷ்டிகரை நினைத்துப்பார்!! ஈசாக்கு அப்படிப்பட்டவனாய் இருந்ததினால் அவனுக்கான நல்ல துணையாக ரெபேக்காள் அவனைத் தேடி வரும்படி செய்தார். மாலை மயக்கும் நேரத்தில் ஒரு வாலிபன் தேடிச் சென்றது விபச்சார ஸ்திரீயை என்று நீதிமொழிகளில் வாசிக்கிறோம். வாலிபனே நீ முதலாவது தேவனடைய ராஜ்யமாகிய சபைக் கூடுதலில் உற்சாகமாய் இருப்பாயானால், கிறிஸ்துவுக்குப் பிரியமாய் நடப்பாயானால் உனக்கேற்ற நல்ல துணை நிச்சயம் தேவன் உன்னைச் தேடிவரும்படிச் செய்வார்.

யாக்கோபு தன் சகோதரன் ஏசாவுக்கு பயந்து தாயின் அறிவுரைப்படி தனியாகப் பிரயாணப்பட்டுப் போன போது தேவன் அவனைச் சந்தித்து நான் உன்னோட இருக்கிறேன் என்று தைரியப்படுத்தினார் ( ஆதி 28: 14, 15). அப்படி தனி ஒருவனாக சென்ற அவனைத்தான் தேவன், மனைவி மக்களைக் கொடுத்து இஸ்ரவேல் ஜனங்கள் உருவாகக் காரணமாக அவனை உயர்த்தினார். தேவனுடைய பிள்ளையே, நீ தனிமையிலிருந்தால் கவலைப்படாதே தேவன் உன்னோடு இருக்கிறார், அவர் தூங்குவதும் இல்லை, உறங்குவதும் இல்லை! அதே போல யோசேப்பு தன் தனிமையில் தவறு செய்யும் சூழ்நிலை வலிய வந்த போதும், தேவனுக்குப் பயந்து விலகி ஓடினான். பிற்பாடு அவன் எகிப்து தேசம் முழுமைக்கும் அதிபதியாக உயர்த்தப்பட்டான். வாலிபனே, ஞாபகம் வை! யோசோப்பு மட்டும் போத்திப்பார் வீட்டில் அந்தப் பாவத்திற்கு இணங்கியிருந்தால் அவன் வாழ்நாள் முழுவதும் ஒரு அடிமையாகவே வாழ்ந்து மடித்திருப்பான். ஆகவே, தனிமையில் எச்சரிப்பாயிரு!

நாம் ஆண்டவராகிய இயோசவை கவனித்துப் பார்த்தால் அநேக முறை ஜெபம் செய்ய அவர் தனிமையை நாடிச்சென்றதை காண்கிறோம்( மத் 14:23, லூக் 5:16) மலை மீது, வனாந்தரம் போன்ற எல்லா இடத்திலும் தனிமையைச் சாடிச்சொன்று தேவனனோடே உறவாடினார். நாம் நம் தனமையை எப்படி செலவழிக்கிறோம். என்பதைச் சிந்திக்க வேண்டும். அநேகர் ஜெபம் செய்ய தனிமையை நாட முயற்சிப்பது இல்லை. ஆனால் கிறிஸ்தவர்களாகிய நாம் அதில் முனைப்பு காண்பிக்க வேண்டும். நம் அநேக பிரச்சனைகள், கவலைகள் மனக்குழப்பங்கள் யாவும் தீர ஒரே வழி தனிமை ஜெபமே. அதை நம்மில் பலப்பேர் மறந்து விட்டு

தேவன் மீது மனத்தாங்கலாகி மதியீனாமக வருத்தத்தில் இருக்கின்றோம். தனி ஜெபமே ஒவ்வொரு கிறிஸ்தவனின் ஆயுதம் மற்றும் சொத்து ஆகும். உலக மக்கள் மதுபானம் பண்ண பல சாக்குப் போக்குகள் சொல்லி ஒன்றாகக் கூட்டங் கூடுகிறார்கள் பணக்கார மேல் தட்டு மக்களும் அப்படித்தான் நடந்து பிசாசின் தந்திரங்களில் விழுந்து போகிறார்கள்.

மற்றவர்களின் குறைகளைச் சுட்டிக் காட்ட தனிமையைப் பயன்படுத்துமாறு ஆண்டவர் ஆலோசனை சொல்லுகிறார் மத். 185:15] அது ஒரு ஞானமான காரியம் ஆகும். அதே போல் மற்றவர்களிடம் உவமைகளாக பேசிய ஆண்டவர் இதை சீஷர்களுக்குப் புரிய வைக்க தனிமையைத் தெரிவு செய்தார் [மாற். 4:10] தேவனுடைய சத்தியங்களை நாம் புரிந்து கொள்ளத் தனிமையில் ஜெபம், வேதவாசிப்பு போன்ற காரியங்களை நாம் கடைபிடிக்க வேண்டும். தாங்கள் ஏன் அசுத்த ஆவியைத் துரத்த முடியாமற் போயிற்று என்று சீஷர்கள் தனிமையில் இயேசுவிடம் கேட்ட போது [மத் 17:19] அது அவர்களின் விசுவாசக்குறவு என்று ஆண்டவர் வெளிப்படுத்தினார். தேவ சமூகத்தில் நீ தனிமையைச் செலவிடப் பழகாவிட்டால் உன் பெலவீனம் உனக்குத் தெரியாது. கிறிஸ்துவுக்குள் வளர நாம் சபை கூடுதலை தவறவிடாமல் பங்கு பெறுவது அவசியமாகிறது.

ஆண்டவர் இயேசு பிதாவுக்குப் பிரியமானவைகளைச் செய்தபடியால் தேவன் அவரைத் தனியே இருக்கவிட வில்லை [யோவான் 8:29] நாமும் சபையில் நமக்குச் சொல்லப்படும் வேத ஆலோசனைகளைக் கவனமாகக் கேட்டு நாமும் தேவனுக்கு பிரியமானதை செய்வோமானால் தேவன் நமக்குத் துணையாய் இருப்பார். நாமும் வேதத்தை வாசிக்க நேரம் ஒதுக்கி நம்முடைய தனிமையை ஆசீர்வாதமாக மாற்றிக்கொள்ள வேண்டும். தாவீது தனது சங்கீதத்தில் கர்த்தாவே, காலையிலே என் சத்தத்தைக் கேட்டருள்வீர்; காலையிலே உமக்கு நேரே வந்து ஆயத்தமாகி, காத்திருப்பேன் [சங்கீதம் 5:3] ஜெபிக்கவும் , வேதம் வாசிக்கவும் கிறிஸ்தவன் காலை நேரத்தை பயன்படுத்தத் தவறினால் அவனுடைய ஆவிக்குரிய வாழ்வு அஸ்தமித்துவிடும் என்பதில் ஐய மில்லை. ஆகவே, தூக்கம், மற்றும் மாம்சக்கியைகளைக் களைத்து அதிகாலைத் தனிமையை நாம் அனைவரும் பயன்படுத்தி ஆசீர்வாதம் பெறுவோம். தேவக்கிருபை நம் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். ★

# இயேசுவைத் தொழுது கொள்ளலாமா?

Bro. ஆறுமுகம்

**வெ**ளி 5:14 ல் பேசப்படும் இருபத்தி நான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும் **வணக்கமாய் விழுந்து சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டார்கள்** என்ற சொல்லப்படுகிறது. இவர்கள் பிதாவகிய தேவனுக்கு முன்பாக வணக்கமாய் விழவில்லை, [வெளி. 4:10]. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும் அப்படிச் செய்தார்கள் [வெளி 5:8, 10]. வணக்கமாய் விழுதல் என்பதை போற்றி வழிபடுதல் என்பதாக ஏராளமான விவிலிய விரிவுரையாளர்கள் குறிப்பிடுகின்றன. எப்படியாயினும், இந்த வார்த்தை தொழுகையுடன் சம்பந்தப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. மேலும், பிதவாகிய தேவனைப் போலவே இயேசுவும் சதாகாலங்களிலும் உணிரோடிருப்பவர் தான் வெளி4:10 சாத காலங்களிலம் உயிரோடிருக்கும் பிதாவை தொழுது கொள்ளுதலையும் 5:14 சதா காலங்களிலும் உயிரோடிருக்கும் குமாரனாகிய கிறிஸ்துவை தொழுது கொள்ளுதலையும் தெளிவுபடுத்துகிறது.

III. தேவனைத் தொழுது கொள்ளுதலையே இயேசுவும் தேவ தூதனும் சொல்லி இருப்பதால், இயேசுவை தொழுது கொள் ளுதல் எதிரானது தானே என்று சிலர் வாதிடுகின்றனர்.

1. தேவனைத் தொழுதுகொள் என்று தேவ தூதனும் இயேசுவும் சொன்னது உண்மையே [யோவ4:24; வெளி19:10; 22:8,90] அதே போல தானே தேவனும் குமாரனைத் தொழுது கொள்ளச் சொன்னார் [ எபி1:6].

a). குமாரனும், தூதனும், தங்கள் தாழ்மையை வெளிப்படுத்துகின்றனர். ஆகிலும், இயேசுவைத் தொழுது கொண்டதற்கான ஆதாரங்களை மேற்சொன்ன வசனங்களில் ஆராய்ந்தோம். ஆனாலும், **தேவ தூதனைத் தொழுது கொண்டதற்கான** வசன ஆதாரம் இல்லை.

b). **தேவனைத்** தொழுதுகொள் என்று சொல்வதன் மூலம் கிறிஸ்து தம்மை தொழுதுகொள்ளக் கூடாது என்று எங்கும் சொல்லவில்லையே. யோவான்4:24 ல் இயேசு தம்மை தொழுது கொள்ளக்கூடாது என்ற பொருளில் சொல்லி யிருந்தால் இயேசுவைத் தொழுது கொண்டதாக நாம் முன் பக்கங்களில் பார்த்த நிகழ்ச்சிகள் பொய்யாகிவிடும்.

c). எபிரேயச் சொல் அகராதி 430-ம், கிரேக்க சொல் அகராதி எண் 2316 தேவனை குறிக்கும் பன்மை சொல்லில் (தேவத் துவத்தின் ஒன்றிற்கும் மேற்பட்ட நபர்த்துவத்தில்) பேசப் படுகிறது. எனவே, இயேசு யோவான் 4:24 லும் தேவ தூதன் வெளி 19:10, 22:8,9லும் குறிப்பிட்ட தேவன் என்னும் பதம் மேற்குறித்த பன்மையைக் குறிப்பதற்கு. கிரேக்க வார்த்தையான 2316ஐ தான் பயன்படுத்துகின்றனர். எனவே, இந்த கண்ணோட்டத்தின்படி, தேவனைத் தொழுது கொள்ளுதலில் இயேசுவையும் உட்படுத்தியது. இதையாராலும் மறுக்க இயலாது.

d). **தேவனைத் தொழுது கொள்ளுங்கள்** என்று இயேசு சொன்னது அவருடைய தாழ்மையை வெளிப்படுத்தவே. உதாரணமாக லூக்கா 18:18,19ல் ஜனங்களின் தலைவன் ஒருவன் வந்து, நல்ல போதகரே, நித்திய ஜீவனைப் பெறுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர், நீ என்னை நல்லவன் என்ற சொல்வானேன்; தேவன் ஒருவரைத் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே? என்று சொன்னார். இயேசு சொன்ன இந்த வார்த்தையை எடுத்துக் கொண்டு இயேசு நல்லவரல்ல; தேவன் (பிதா) ஒருவர் மட்டுமே நல்லவர் என்று வாதிடலாமா? இந்த வசனத்தில் இயேசு சொன்னது தாழ்மையையே குறிக்கிறது என்பது தெளிவு.

கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிறவன் இரட்சிக்கப்படுவான். மேற்குறித்த இந்த சொற்றொடர் இயேசுவை தொழுது கொள்ளுதலை குறிப்பதில்லை; அவருடைய நாமத்தை அறிக்கையிடுதலைக் குறிக்கிறது. என்கின்றனர். ஆனால், மூலபாஷையில் இது தொகுப்புச் சொல்லாகும். இந்த வார்த்தை இடத்திற்கேற்ற பொருளை வேறுபட்ட பதங்களில் கொடுக்கிறது. எபிரேய மொழியில் யோவேல் 2:32 (Oura) வோரா எனப்படுகிறது. (எபி எண்1721) நோக்கிக் கூப்பிடுதல் மையமாக வைத்து அழைத்தல் நாமத்தை பிரஸ்தாபித்தல், அறிக்கையிடுதல், வெளிப்படுத்துதல் போன்ற பொருளையுடையதாக பேசப்படுகிறது.

யோவேலின் வார்த்தையை கிரேக்க மொழியில் கையாளும் பேதுரு, அப் 2:21-ல் உதவி கேட்டு கூப்பிடுதல், தொழுதல், உப பெயரை பயன்படுத்தி கூப்பிடுதல் ஆகியவற்றை குறிப்பிடுகின்ற சொல்லைப்பயன்படுத்துகிறார் ( கிரேக்க மொழி பொருள் அகராதி எண் 1941: எபிக்காலே ஒமாஹி).

I கொரிந்தியர் 1:2- ல் பேசப்படுதலை உலக பிரசித்திப்பெற்ற வேத வல்லுநர் சகோ. டேவிட் லிப்ஸ் கோம் **(DAVID LIPSCOMB)** 1976–ல் எழுதிய I கொரிந்தியர் விளக்க வுரையில் **இங்கே கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுதல் என்பது இயேசுவை தொழுது கொள்ளுவதை குறிப்பிடுகிறது. இது தேவனுக்குச் செலுத்தும் தொழுகையை போன்றதே. எனவே, அனைத்து கிறிஸ்தவர்களும் இயேசுவை எங்கும் தொழுது கொள்கிறார்கள் என்பதையே** I கொரிந்தியர்1:2 பவுல் வலியுறுத்துகிறார் என்கிறார் (பக்கம்2).

மேலும், தொழுது கொள்ளுதலில் இது ஒரு பகுதிதான். ஜெபித்தல் மட்டும் தொழுகையல்ல. தொழுகையும், ஆராதனையும், ஜெபத்தோடு கூட வேறு சில செயல்களையும் உள்ளடக்கியதே. எனவே, இயேசு ஜெபத்திற்கு சொன்ன கருத்தை தொழுகையுடன் குழப்புவது சுய கருத்து. இதைப் பிரச்சனையாக்க வேண்டாமே. இயேசுவை தனிப்பட்ட முறையிலும், தேவனைத் தனிப்பட்ட முறையிலும் இரண்டு ஆராதனைகளை நான் குறிப்பிடவில்லை. இயேசுவும் தொழுது கொள்ளப்பட்டுள்ளா என்பது திருமறையின் போதனை. ★

## நாளும் நடப்பும்

- ★ பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேரை விடுவிக்க வேண்டும் – என அமெரிக்காவில் சீக்கியர்கள் தமிழக கவர்னருக்கு கடிதம்!
- ★ சென்னையில் குழந்தைகள் நல மருத்துவமனையில் ரூ 35 கோடியில் சிறப்பு சிகிச்சை பிரிவுகள்: முதல்வர் திறந்து வைத்தார்.
- ★ அரசுப் பள்ளிகளில் கல்வித் தரம் உயர்த்த தமிழக அரசு நடவடிக்கை.
- ★ சூரியனை ஆய்வு செய்யும் விண்கலப்பணி இன்னும் 4 ஆண்டுகளில் நிறைவடையும்: விஞ்ஞானிகள் அறிவிப்பு.
- ★ இலங்கை நடாளுமன்றத் தேர்தலில் ராஜபக்சே பெரும் தோல்வியை தழுவினார்.
- ★ சச்சினின் 10,000 ரன்களை தற்போது இந்திய அணி கேப்டன் விராட் கோஹ்லி முறியடித்து சாதனை.

# பிள்ளைகளின் சமாதானம்

Bro. K.M. பிலிப்

இத்தொடர் செய்தி மூலம் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் தேவனுக்கு நன்றி செலுத்துகிறேன். யாவருக்கும் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏசா 54:13 ல், உன் பிள்ளைகளின் சமாதானம் பெரிதாயிருக்குமென்றும், அதற்கான வழி, அவர்கள் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள் என்பதையும் தேவன் தெளிவாக வெளிப்படுத்தினார். ஆம், இன்றைய சமுதாயச் சூழலில் நம் பிள்ளைகள் சிக்கி சமாதானத்தை இழந்து விடாதிருக்க, 1. போதி என்ற தலைப்பில் தேவ ஆலோசனைகளைப் பெற்றோம். போதிப்பதில் திட்டமிட்டு தெளிவாய், கருத்தாய் போதிக்க வேண்டுமென்றும், உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு. அவர்களுக்கு இடறலில்லை (சங்.119:116) என்றும், ஆகவே என் பிள்ளைகளின் சமாதானம் என் கையில் என்பதை உணர்ந்து அதை சவாலாக ஏற்றுக் கொண்டோம். தொடர்ந்து, 2- நடந்து, 3- நட என்ற தேவ ஆலோசனை களையும் உற்சாகமாய் ஏற்றுக்கொண்டு ஜெயம் கொடுக்கும் இயேசுவின் நாமத்தில் சவாலில் வெற்றி பெறுவோம்; அப்பொழுது நம் பிள்ளைகளின் சமாதானம் பெரியதாயிருக்கும்.

**இரண்டாவது ஆலோசனை: நடத்து:**

ஒன்றை நிலைநிறுத்தப்போதிப்பதோடு , அதன்படி நடக்க பிள்ளைகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். விதைப்பதால் மட்டும் பலன் கிடைப்பதில்லை. தொடர்ந்து அதன் வளர்ச்சியிலும் தொடர் கவனம் செலுத்தினால் மட்டுமே பலன் பெற முடியும். பிள்ளையானவன் நடக்க வேண்டிய வழியில் அவனை நடத்து; அவன் முதிர் வயதிலும் அதை விடாதிருப்பான் (நீ :22:6) என்று ஞானி வெகு ஞானமாய் சொல்லியிருக்கிறார். நம் தமிழ் வழக்கில், ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்ற பழமொழியைக் கூட நாம் அறிந்திருக்கிறோம். எனவே, ஏற்ற வயதில் போதித்து அதன்படி செய்ய நடத்துவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

ஏலி தன் இரு ஆண் பிள்ளைகளுக்கும் ஆசாரியத்துவத்தைக் குறித்து நிச்சயம் போதித்திருப்பான். ஆனால், அதை சரியாய் நடைமுறைப்படுத்துவதில், நீ என்னை பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன், என்று தேவனே ஏலியை கடித்துக் கொள்ளுகிற அளவில் பிள்ளைகளின் துணிகரமான மீறுதல்களை கண்டும் காணதவன் போல் இருந்துவிட்டான். துணிகரமான பாவத்தால் தேவ கோபத்துகாளான தன் இரண்ட பிள்ளைகளிலும் ஏலி, ஒரே நாளில் இழந்து தவித்தான் [I சாமு. 2, 4 அதி] ஆம் தவறுகளைச் சுட்டிக்காட்டுவதோடு , கடிந்து கொண்டு, புத்தி சொல்லி சரியானதைச் செய்விப்பதில் பெற்றோர்கள் உறுதியான உள்ளத்தை பெற்றிருக்க வேண்டும்.. நேரமில்லை என்று பிள்ளைகளன் வாழ்க்கையை நெறி வழிப்படுத்துவதில் ஒரு போதும் தயக்கம் காட்ட வேண்டாம். நமக்கு நேரம் கிடைக்கும் போது என்பதை விட பிள்ளைகள் ஆயத்தமாயி ருக்கும் போது அவர்களுக்குத் தேவை ஏற்படும் போது எல்லா நல்ல ஆதாரங்களையும் [நேரம், பணம், பாசம்] முழு ஆர்வத்துடன் நடைமுறைப்படுத்துவதில் காலத்தை பிரயோசனைப்படுத்திக்கொள்ளுங்கள். காலத்தின் அருமையை உணரச் செய்யுங்கள். ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு என்பதைக் புரிய வையுங்கள். பழைய ஏற்பாட்டுக் கட்டளை ஒன்றை உங்கள் முன் நிறுத்துவது என் கடமை யாயிருக்கிறது. பெற்றோர் சொல் கேளாமலும் தண்டிக்கப்பட்டும், கீழ்ப்படியாமலும் போகிற பிள்ளையைக் குறித்து அப்பட்டணத்து மூப்பர்களிடம் சொன்னால் அப்பட்டணத்து மனிதர்களெல்லாம், அப்பிள்ளை சாகும்படி அவன் மேல் கல்லெறிந்து கொன்று போடுவார்கள். இப்படி தீமை சமுதாயத்தின் நடுவிலிருந்து அகற்றுவதில் பெற்றோரும், சபையாரும் உறுதியாயிருந்தார்கள் [உபா.21:18- 21]. ஆனால், புதிய ஏற்பாட்டு பெற்றோர் களுக்கு இவ்வளவு கடுமையான சட்டம் உண்டா? அதே சமயம் தீமையை, பொல்லாங்கை, பாவத்தை, நியாயமற்ற தன்மையை பிள்ளைகளிடத்திலிருந்து முற்றிலும் அகற்றுப்போடுவதில் அன்போட போதித்து, உறுதியாய் நடத்தினால் நம் பிள்ளைகளின் சமாதானம் பெருகும்.

அன்போடு அணைக்கின்ற அதே கைகளில் தேவைப்பட்டால் பிரம்பை கையாளவும் தயக்கம் காட்டக் கூடாது. [ நீ 22:15] பிரம்பும் கடிந்து கொள்ளுவதலும்

ஞானத்தைக் கொடுக்கும் (நீ 29:15). ஆம், எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய் காணாமல் துக்கமாய்க் காணும். ஆகிலும் பிற்காலத்தில்..... அது நீதியான சமாதான பலனைத் தரும் (எபி12:11) என்பதே தேவ ஆலோசனை. பிள்ளைகளை சபைக் கூடுதல், பாடுதல், வேதம் வாசித்தல், ஜெபித்தல், குடும்ப ஜெபங்களில் தவறாமல் பங்கு பெறுதல், ஆகியவற்றில் உறுதியாய் நடத்த வேண்டும்.

பெற்றோர்க்கு கீழ்படிவது என்பது, அடக்குவது என்று நினைக்காமல் கர்த்தருக்குள் கீழ்ப்படிவது நியாயம், அது நன்மை பயக்கும், அதனால் வாழ்நாள் நீடித்திருக்கும், (எபி 6:1-2), இது கர்த்தருக்குப் பிரியம் என்பதையும் பிள்ளைகள் புரிந்து கொண்டு தாங்களாகவே விருப்பத்தோடு செயல்படும் வகையில் நடத்திவிட்டால் உன் பிள்ளைகளின் சமாதானம் பெரியாதாயிருக்கும்.

**மூன்றாவது ஆலோசனை - நட**

மாதிரி என்பது எல்லா நிலைகளிலும் அவசிய மாயிருக்கிறது. பிள்ளைகளின் முதல் மாதிரி பெற்றோர்கள் தான். தாயைப் போல பிள்ளை என்ற பழமொழி நாம் அறிந்ததே. போதிப்பது, நடத்துவது இவைகளைக் காட்டிலும் நடந்து காட்டுதல், பிள்ளைகள் எளிதாக, விருப்பத்தோடு, அதை ஒரு பெருமையாகக் கூட எண்ணிப் பிடித்துக் கொள் வார்கள். நீதிமான் தன் உத்தமத்திலே நடக்கிறான் ; அவனுக் குப் பிறகு அவன் பிள்ளைகளும் பாக்யவான்களாயிருபார்கள் (நீ20:7) என்பது நடைமுறை வாழ்க்கையின் உண்மை யாகும். பிள்ளைகள் மீது நம் செல்வாக்கை காட்டு முன் முதலில் நாம் அதில் சரியாயிருக்க வேண்டும்.

ஈசாக்கு வளர்ந்த பிள்ளையாயிருந்தும், தன் தகப்பன் ஆபிரகாம் தன்னை பலி கொடுக்கப் போகிறார் என்று அறிந் திருந்தம் தன் உயிரையே ஒப்புக் கொடுத்து முழுமையாய் தன்னைக் கீழ்படுத்தினார். காரணம், எப்பொழுதும் பரம தகப்பனுக்கு கீழ்ப்படிவதையே நீதியாக எண்ணி, தன் கண் களுக்கு முன்பாக அனுதினமும் நடந்து காட்டிய தந்தை ஆபிரகாமின் வாழ்க்கையே இதற்குக் காரணம். நோவாவின் ஆண் பிள்ளைகள் மூவரும் திருமணமானவர்கள். அவர்களைச் சுற்றி வாழ்ந்த மக்களோ அக்கிரம சிந்தை உள்ளவர்கள். ஆனால், இம்மூன்று ஆண் மக்களும் தகப்பன் நோவாவோடு சேர்ந்து தேவ கட்டளையை (பேழை கட்டுவதில்) நிறை வேற்றுவதில் கீழ்படிந்த தங்களை ஒப்புக் கொடுத்ததற்கு காரணம் நோவா தன் காலத்தில் வாழ்தவகளுக்குள்ளே தன்னை நீதிமானாக, உத்தமனாக, தேவனோடு சஞ்சரிக்கிறவனாக, அனுதினமும் பிள்ளைகளுக்கு நடந்து காட்டிய வாழ்க்கையே ஆகும் (ஆதி 6:9).

கொல்கதா மலையில் நடந்த நிகழ்ச்சியை உற்றுப் பார்த்தால், கரடுமுரடான, கொலைபாதகனான, பாவம் செய்ய அஞ்சாத உள்ளம் கொண்ட சிலுவைக் கள்ளர்களில் ஒருவன் மனமாறி, உள்ளத்தில் இயேசுவை ஆண்டவராக ஏற்றுக் கொண்டு, இயேசுவோடு வாழும் வாழ்க்கையை விரும்பக் காரணம், இயேசு தான் போதித்ததற்கேற்ற வாழ்க்கையை சிலுவையில் கள்ளன் முன் வாழ்ந்து காட்டினார். சத்துருகளையும் நேசிக்கும் பண்பை அங்கே கள்ளன் கண்டான். அந்த நடைமுறை கள்வனின் உள்ளத்தையே முற்றிலும் மாற்றியது. கரடுமுரடான கள்ளவனை நடக்கையின் மூலம் தன் நடைகளை சீர்படுத்திக்கொள்ள மூடியுமென்றால், மென்மையான உள்ளம் கொண்ட நம் பிள்ளைகளை நல்வழிப் படுத்தவது கடினமே அல்ல. (Iபேதுரு 3:1-6] ல் ஒரு அவிசு வாசியான கணவனை, விசுவாசமான மனைவி தன் பய பக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையால் ஆதாயப்படுத்திக் கொள்ளமுடியும் என்று அறைக்கூவல் விடுவிக்கிறார். ஓரளவு வளர்ந்த நிலையில் உள்ளவர்களையே நடக்கை நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்துமென்றால், வளரும் பிஞ்சுள்ளங்களில் நல்லதொரு மாற்றத்தை நம் நடக்கையின் மூலம் நிச்சயம் சாதிக்க முடியும்.

ஆபிரகாமின் வாழ்க்கை – தன் மகன் ஈசாக்குக்கு நூறு சதவீதம் சமாதானத்தை தேடித் தந்தது. மொர்த்தெகாயின் போதித்து, நடத்தி, நடந்துகாட்டியதை அப்படியே பின்பற்றிய எஸ்தரின் வவ்க்கையை ராணியாக உயர்த்தியது.

அன்பானவர்களே! உங்கள் பிள்ளைகளின் சமாதான வாழ்க்கை உங்கள் கையில் தான். தீர்க்ஙகதரிசி தன் பிள்ளைகளைக் குறித்து சொல்வதை கவனியுங்கள். இதோ நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த என் பிள்ளைகளும், சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்ததராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம் (ஏசா 8:18). இது உண்மை. இந்த உண்மை உங்கள் பிள்ளைகளின் வாழ்க்கையில் மிகப்பெரிய செழிப்பையும், வாழ்நாள் முழுவதும் சமாதான வாழ்க்கையையும் கொடுக்க, கர்த்தருக்கள் உங்கள் பிள்ளைகளுக்கு போதித்து, நடத்தி, நடந்து காட்டுங்கள். தேவ சமாதானம் நம் அவையாரோடும் இருப்பதாக, ஆமென். ★